
www.tamilarangam.net

# சிந்து!




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"இதந்தரு மனையின் நீங்கி
இடர்மிகு சிறைப்பட்டாலும்,
பதந்திரு இரண்டும் மாறிப்
பழிமிகுந் திழிவுற்றாலும்,
விதந்தரு கோடி இன்னல்
விளைத்தெனை அழித்திட்டாலும்,
சுதந்திர தேவி! நின்னைத்
தொழுதிடல் மறக்கிலேனே"

— பாரதி —

மலர் 1 இதழ் 6

# சிந்து

ஆசிரியர்:

சி. உதயகுமார்

வடிவமைப்பு:

நேசன்

ஆலோசனை:

[illegible]



கலை இலக்கிய வெளியீடு



www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உங்களுடன் சில நிமிடங்கள்...

இன்றைய காலகட்டத்தில் நாம் பார்த்திருக்கும் துயரங்களிலிருந்தும் நமது இதயத்தைத் தொலைத்து விட்டு நிற்கும் பொருள்களைத் தேடி அலையும் எம் மக்கள் அனைவருக்கும் ஒரே ஆசை,

'என்று எம் வாழ்வில் அமைதி கிட்டும்!'

என்பதாகத் தான் இருக்கும்.

ஓடியோடித் தூரங்களையும் இழந்து நிலைகளையும் தொலைத்து விட்ட நிலையிலும் எம் மக்களின் இவ்வாசை நியாயமானதும் கூட.

இந்நிலையில் இலங்கை அரசினது, சகல கட்சிகள், ஸ்தாபனங்களையும் கூட்டி, நாட்டின் இன்றைய நிலைமைகளை ஆராய்ந்து அமைதியை ஏற்படுத்த எடுக்கப்படும் நடவடிக்கைகளை தமிழ் மக்கள் மட்டுமன்றி சகல தரப்பினரும் நம்பிக்கையுடன்..



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எதிர்பார்க்கின்றனர்.

அண்மையில் நடந்து முடிந்த 21 அமைப்புகளின் ஆய்வுத் தலைவர்கள் கலந்து கொண்ட மாநாடு நம்பிக்கை நிறைவுடன் தொடர்ந்து வருவிருக்கும் கூட்டங்கள் அனைவரதும் ஆவலையும் கவனத்தையும் பெற்றுள்ளது.

இச்சந்தர்ப்பத்தில், தமிழ் மக்களின் அபிலாசைகளையும் அபிப்பிராயங்களையும் கவனத்திற்கெடுத்து இதுவரை நிகழ்ந்து வந்த தவறுகின்ற சில திண்டாட்டங்களையும் நீக்கும் வகையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென்பதே சிந்துவின் எதிர்பார்ப்பாகும்.

— ஆசிரியர் —

---

## “சிந்து”வுடனான அனைத்து தொடர்புகட்கும்:-

S. UTHAYA KUMAR
C/O N. GANDHINESAN
18 RUE HENRI BARBUSSE
92000 NANTERRE

www.tamilarangam.net

# சிழகாயச் சந்தையில்

சாட்டாளிகளாய்
முட்டை அடைக்குடம்
பாட்டாளிகளில்
நூறும் ஒருவனை
இந்தச் சந்தையில்..

கைகளற்று உறவுகள்
தலைமாட்டுப் புதைகள்
கால் மாட்டுக் கொள்ளிகள்
இறுதியின் பெயரால்
இன்னும் தெரியாத
பற்ற பாசங்கள்
சிதைவுற்றுக்காக...
சுயங்களுக்காக...
கொழுந்துவர்க்கிரா....

வாசித்துத் தெரியாத
வாசமான வாசகர்கள்
சொல்லத் தெரியாத
சொந்த முகவரிகள்
இருபத்தைந்திலிருந்து
ஐம்பத்தைந்திற்கு
ஏறியவர்கள்...
ஐம்பத்தைந்திலிருந்து
இருபத்தைந்திற்கு
இறங்கியவர்கள்...

புதிய பிரதேசத்தின்
பிரவேசத்தால்
பிரபலமானாமல்
கடந்து போகும்
அந்நியக் கிழக்கர்
கருவியகால்

பெருமதிப் போகும்
பல நிறுவனங்கள்
நீண்ட இரவுப்
கண்கள் விழிக்கும்
அவர்களின்
சோகச் சுயசரிதைகள்
பாசு வலைகள்
பாரப்பில்
சிதறிவிட்டு
தலைகுனிகின்ற
நிலை

நேச உறவுக்கள்
நிமிடங்களுக்கு
விலை மதிப்பிட்டு
நடந்து போன
காவடிகளுக்கும்
கணக்கு வழக்கு

இவற்றினிடையே
மனிதத்தன்மையோடு
வாழவிரும்பும்
நானும் ஓர்
தொழிலாளி.

– ரி. கருணரதீ –

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தேசிய இன எழுச்சியும் ஈழமும்

## ஒரு பார்வை

இலங்கைத் தமிழரிடை அண்மையில் ஏற்பட்டுள்ள தேசிய இன எழுச்சியை யாவரும் அறிவர். இது ஒரு தற்செயல் நிகழ்ச்சியல்ல. இதற்குரிய காரணங்கள் ஆழமாக ஆராயப்பட வேண்டியவை.

இலங்கையின் வட பகுதியிலேயே தேசிய இன எழுச்சி தற்போது வலுவடைந்துள்ளது. சிறப்பாக யாழ்ப்பாணக் குடா நாட்டையும் குறிப்பிட வேண்டும். இங்குள்ள மக்களின் பிரதான தொழில் விவசாயம். துண்டாடிய நிலத்தில் காய்கறிப் பயிர்ச் செய்கையே நடைபெற்று வந்தது. பல நூற்ரண்டு காலமாக ஒருவித கிராமியப் பொருளாதாரமே நிலவியது. இதனால் நிலப் பிரபுத்துவ குணம்சங்களான சாதி, மதப் பிடிப்பும் வலுவாக நிலை பெற்றன. தமிழ் நாட்டுப் பிராமண வகுப்பினர் போல இங்குள்ள உயர்ந்த சாதியினராகக் கருதப்பட்ட வேளாளர் ஆங்கிலக் கல்வியை முதன்மையாகக் கற்றனர். இதனால் ஆங்கிலேயர் ஆட்சியின் போதும் அதன் பின்னர் சில காலமும் அரசாங்க வேலைகளில் பெரும் பகுதியைக் கைப்பற்றினர்.

நீண்ட காலமாகவே யாழ்ப்பாணத்து உற்பத்தி முறை மிகவும் பிற்பட்ட நிலையிலேயே இருந்தது. வானம் பார்த்த பூமி. அதனால் கிணறுகள் உற்பத்தி முறையில் முக்கிய பங்கு வகித்தன. கிணற்றை ஒட்டித் துண்டாடப்பட்ட சிறு சிறு நிலங்கள், நீர் இறைப்பதற்காகப் பயன்படுத்தப்படும் துலா.

அதன்மேல் முன்னும் பின்னுமாக உழக்கும் கூலி விவசாயிகள். நிலத்தை மண்வெட்டியால் கொத்திப் பிரிக்கும் உழைப்பாளர். உரமாக மாட்டுச் சாணம், குப்பைகள், இலைகுழைகள்.

இவ்வாறு இருந்த உற்பத்தி முறைகள் யாவும் சென்ற 10, 12 ஆண்டுகளில் பெரிய மாற்றமடைந்தன. நீரிறைக்க

www.tamilarangam.net

பம்செட், உழுவதற்கு டிராக்டர், நிலத்திற்கு இரசாயன உரம், பயிர் நோய்களுக்கு முன்னர் அவர்கள் கண்டு அறியாத கிருமி நாசினிகள். இடதுசாரிகளுடன் இணைந்த சிறிமாவோ ஆட்சி 1971 இல் வந்தபின்னர் வெங்காயம், மிளகாய், உருளைக் கிழங்கு ஆகியனவற்றின் இறக்குமதி தடை செய்யப்பட்டது. பெரும்பாலும் வட பகுதிக்காக மட்டுமாக இருந்த உற்பத்தி இலங்கை பூராவுக்குமாக மாறியது.

சுன்னாகம், சாவகச்சேரி ஆகிய கிராமியச் சந்தைகளில் விற்கப்பட்ட விளைபொருள்கள் கொழும்புச் சந்தை மூலம் இலங்கை முழுவதும் விநியோகிக்கப்பட்டன. உற்பத்தி முறையிலும் விநியோகத்திலும் ஏற்பட்ட பெரிய மாற்றம் பல நூற்றாண்டுகளாக நடுத்தர விவசாயிகளாக வாழ்க்கையோடு போராடிக் கொண்டிருந்தவர்களைத் திடீரெனப் பணக்கார விவசாயிகளாக்கியது. இவர்கள் ஓரளவு அரசியல் அந்தஸ்து பெற்றதோடு தம் பிள்ளைகளையும் உயர் கல்விக்கு அனுப்ப முயல்றனர்.

உயர் கல்வியில் ஏற்பட்ட போட்டி பணக்கார விவசாயிகளின் பிள்ளைகளையும் பெரிதும் பாதித்தது. 12ஆம் வகுப்பு வரை கற்றவரிடை ஏற்பட்ட வேலையில்லாத் திண்டாட்டமும் புதிய முரண்பாடுகளை ஏற்படுத்தின.

1977இல் ஏற்பட்ட ஐ.தே. கட்சியின் அரசு இறக்குமதிகளைத் தளர்த்தியது. இப் புதிய பொருளாதாரக் கொள்கை யாழ்ப்பாண விவசாயிகளின் வினை பொருட்களின் விலைகளில் ஏற்ற இறக்கங்களை ஏற்புடுத்தியது. இதனால் இவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர்.

அவ்வேளை ஏற்பட்ட புதிய பொருளாதாரக் கொள்கையும் டாலரின் மதிப்பை உள்நாட்டில் உயர்த்தியது. இதனால் மத்திய கிழக்கு, ஆப்பிரிக்க, ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளுக்கு உழைப்பை விற்க லட்சக் கணக்கானோர் படையெடுத்தனர். இலங்கைத் தமிழர்கள் இச் சூழ்நிலையையும் நன்கு பயன்படுத்திக் கொண்டனர். பல நாடுகளில் அரசியல் அகதிகளாகவும் தஞ்சம் புகுந்து வேலை வாய்ப்பைப் பெற்றனர். இவர்களது பணமும் அரசியல் விழிப்புணர்வும் கூட உள்நாட்டில் ஏற்பட்ட அரசியல் உணர்வுக்கு, தேசிய இன் எழுச்சிக்கு உரமூட்டின.

தேசியம் என்ற உணர்வு சமுதாய வளர்ச்சியின் ஒரு கால கட்டத்திலேயே ஏற்படுகிறது. பிரதானமாக, நிலப் பிரபுத்துவம் உடைந்து முதலாளித்துவம் வளர்ச்சியடையும் வேளையிலேயே தேசியக் குரல் முன் வைக்கப்படுகிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மொழி, பரம்பரையாக வரலாற்று ரீதியாக வாழ்ந்த நிலப்பகுதி, பொருளுற்பத்தி வாழ்வு, சமூக அமைப்பு, பொது மதம், பண்பாடு ஆகியன நிலப் பிரபுத்துவத்திலேயே பெரும்பாலும் நிலைபெற்றிருக்கும். இக் கால கட்டத்தில் ஒற்றுமையின்மை நிலவியிருக்கலாம், முதலாளித்துவ வளர்ச்சி தேசியச் சந்தையை உருவாக்கி பொதுப் பொருளாதாரத்தையும் பண்பாட்டையும் நிலைப்படுத்த முயலும்.

ஆகவே நிலப்பிரபுத்துவ உற்பத்தி முறையின் உடைவும் முதலாளித்துவப் பொருளாதார அமைப்பும் தேசியத்திற்கு வழி வகுப்பவையாகும்.

இலங்கையிலுள்ள தேசிய இன எழுச்சிக்கு நிலப் பிரபுத்துவ உற்பத்தி முறையின் உடைவைப்பற்றி மேலே கண்டோம். தமிழ்த் தேசிய முதலாளிகளின் சந்தைத் தேவையும் ஆதரவும் இல்லாது தமிழ் ஈழக்குரல் எழுவது ஓரளவு விசித்திரமே.

விரலால் எண்ணக் கூடிய தமிழ் தேசிய முதலாளிகளின் தொழிற்சாலைகள் பெரும்பான்மையினரான சிங்களவர் வாழும் மேற்கு மாகாணத்திலேயே உள்ளன. பரவலான இலங்கையின் சந்தையையே இவர்களும் விரும்புகின்றனர். இம்முதலாளிகளையும் தேசிய முதலாளிகள் என்று கூறுவதிலும் பார்க்கத் தரகு முதலாளிகள் என்று கூறுவதே சரியாகும். பொதுவாகவே இலங்கையில் ஆளும் வர்க்கத்தினர் தரகு முதலாளிகளே; தேசியத் தன்மை குன்றிய தரகு முதலாளித்துவக் கலாசாரத்தையும் இலங்கையில் காணலாம். ஆங்கில மொழி மீண்டும் கட்டாய மொழியாகிறது.

சென்ற ஆறு ஆண்டுகளில் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் நேரடிக் கட்டுப்பாட்டுள் இலங்கையின் ஆளும் வர்க்கம் வந்து விட்டது. இந்த உண்மையைக் கடந்த பிப்ரவரி மாதம் டில்லியில் நடைபெற்ற அணிசேரா நாடுகளின் மகாநாட்டில் ஜனாதிபதி ஜயவர்த்தன வெளிப்படையாகக் கூறினார். உலக வங்கி கூறுவனயாவையும் நாம் கேட்டு நடக்க வேண்டியிருக்கிறது என்று தெரிவித்தார். (இந்நிலை மூன்றாம் உலக நாடுகள் அனைத்திலும் நிலவுகிறது.)

ஏகாதிபத்தியத்தின் நேரடிக் கட்டுப்பாடும் உள்நாட்டில் தரகு முதலாளிகளின் ஆதிக்கமும் தமிழ் தேசிய இன எழுச்சியை மழுங்கடிக்கவே செய்யும். சிறிய தீவாயினும் அங்குள்ள பரந்த சந்தையைப் பிரிப்பதை ஏகாதிபத்தியம் ஒரு போதும்

www.tamilarangam.net

விரும்பாது. மேலும், பிரிவு ஏற்படின் இந்தியா வழியாக ரஷ்ய ஆதிக்கத்துடன் தமிழ் ஈழம் செல்லும் வாய்ப்பும் உண்டு. சிங்களத் தரகு முதலாளிகளும் இலங்கைத் தமிழர்களைத் தமிழ் நாட்டுத் தமிழர்களுடன் சேர்த்துப் பார்த்துத் தம்மைச் சிறுபான்மையினராகவே கொள்கின்றனர் இதனாலேயே இலங்கைத் தமிழர்களுக்குச் சலுகைகள் வழங்கி சமரசம் செய்து கொள்ளவும் அஞ்சுகின்றனர். சலுகைகள் வழங்குவதும் நாடு பிரிவதற்கு மேலும் வாய்ப்பு அளிக்கலாம் எனவும் பயப்படுகின்றனர்.

ஏகாதிபத்தியத்திற்கும் இலங்கை மக்களுக்கும் இடையிலுள்ள பிரதான முரண்பாட்டை இரு இன மக்களும் கையிலெடுக்கத் தவறி வருகின்றனர். தமிழ் ஈழத்தை முன்வைப்போர் சிங்கள ஏகாதிபத்தியத்திற்கும் தமக்கும் இடையே பிரதான முரண்பாடு இருப்பதாகக் கொள்கின்றனர். தமது போராட்டத்தைப் போலீசாரையும் இராணுவத்தையும் தாக்குவதன் மூலம் முன்னெடுத்துச் செல்ல முடியும் என எண்ணிச் செயலாற்றுகின்றனர்.

தமிழ் ஈழத்தை முன் வைத்துப் போராட்டம் நடத்துவோரையும் தற்போது தம்மைத் தயார் படுத்துவோரையும் மூன்று வகையாகப் பிரிக்கலாம்.

1) வங்காள தேசப் பிரிவினை போல இலங்கைத் தமிழர் வாழும் வட, கீழ்ப் பகுதிகளைத் தமிழ் ஈழம் எனப் பிரித்துத் தனி ஆட்சி அமைப்பது. மற்றைய பகுதிகளில் வாழும் இலங்கைத் தமிழர், இந்தியத் தமிழரில் விரும்பியவர்களை இப்பகுதியில் வந்து வாழ வசதியளிப்பது. தற்போது தீவிர வாதச் செயலில் ஈடுபட்டிருக்கும் இளைஞர்கள் வன்செயல் மூலம் இதைப் பெற முடியும் என்று போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். பணக்கார விவசாயிகளும் வெளி நாடுகளில் உழைக்கும் தமிழர்களும் இதற்கு ஆதரவு வழங்குகின்றனர். வங்காள தேசப் பிரிவினை போல ஏகாதிபத்தியம் நுழைந்து பிரிவை ஏற்படுத்துவதையும் இவர்கள் விரும்புவர்.

தற்போது இலங்கைத் தமிழரிடை மிகவும் ஆதிக்கம் பெற்றிருக்கும் கருத்து இதுவேயாகும். இத்தகைய பிரிவினையை தமிழர் விடுதலைக் கூட்டணி என்ற பாராளுமன்றப் பிரதிநிதிகளைக் கொண்ட அமைப்பும் சாத்வீக முறையில் வென்றெடுக்க வேண்டும் என விரும்புகிறது.

2) வட, கீழ்ப் பகுதியில் வாழும் தொழிலாள, விவசாயிகளை அணிதிரட்டி புரட்சிமூலம் தமிழ் ஈழத்தை விடுவித்து சோஷலிச அமைப்பை ஏற்படுத்துவது. சிங்களத் தொழிலாள, விவசாயிகளது ஆதரவு இன்றியே இப் புரட்சியை தமிழர்

www.tamilarangam.net

களாகவே நடத்தி விடலாம் என்று இவர்கள் நம்புகின்றனர். புரட்சியாளர் எனக் கூறும் சிங்கள இடதுசாரிகளை நம்ப முடியாது என இக் கோட்பாட்டைச் சார்ந்திருக்கும் இளைஞர்களும் மாணவர்களும் கூறுகின்றனர்.

3) சிங்கள, தமிழ்த்தொழிலாளர்களும் விவசாயிகளும் ஒன்றிணைந்து சோஷலிசப புரட்சியை நடத்துவது. சோஷலிச அமைப்பில் சோவியத் நாட்டில் லெனினால் உறுதி செய்யப் பட்டது போன்ற சுயநிர்ணய உரிமை வழங்கப்படும். சந்தைக்கான தேசியம் அல்ல இது. இங்கு உற்பத்தி சுரண்டலுக்காக நடைபெறப் போவதில்லை. ஆகவே இரு தேசிய இனங்களும் உரிமையுடன் வாழ முடியும். சிங்களப் பகுதியில் வாழும் இலங்கைத் தமிழரும் இந்தியத் தமிழரும் சுமுகமாக ஒரு சோஷலிச அமைப்பிலேயே பாதுகாப்பாக வாழ முடியும் நாட்டின் இன்றைய பொருளாதார நெருக்கடி மக்களின் ஒன்றிணைந்த புரட்சிக்கே விரைவில் இட்டுச் செல்லும் என இக் கோட்பாடு கொண்டோர் நம்புகின்றனர். ஏகாதிபத்திய விடுதலை பிரதான முரண்பாடு என்று இவர்கள் கொள்கின்றனர்.

கூட்டு மொத்தமாகக் கூறின், முதலாளித்துவத்தில் தோன்றிய தேசியம் பண்ட விற்பனைச் சந்தையை ஒட்டி எழுந்த தேசியமாகும். இது சுரண்டலை அடிபபடையாகக்-கொண்ட தேசியம். சோஷலிசத்தில் உற்பத்தி, விநியோகம், பரிமாற்றம் சுரண்டலுக்காக நடைபெறுவதில்லை. மக்களின் தேவையை ஒட்டித் திட்டமிட்டு நடைபெறுகிறது. இங்கேயே தேசிய இனங்களின் சுதந்திரமும் வளர்ச்சியும் ஐக்கியமும் ஒன்றிணைகின்றன. இது மனித இனத்தின் உன்னத வளர்ச்சி நிலையாகும்.

முதலாளித்துவம் நிலையான அமைப்பல்ல; மனித வரலாற்று வளர்ச்சியின் ஒரு கால கட்டமே. பண்ட உற்பத்திச் சந்தையின் எல்லையை ஸ்வத்து அமைக்கப்படும் தேசியம் சோஷலிசத்தில் புதிய இலக்கணம் அல்லது வடிவம் பெறுவதும் இயல்பே. இதுவே இயக்கவியல் பார்வையாகும்.

தேர்தல் முறைகளை முற்றாக நிராகரித்துத் தற்போது வன்முறையில் ஈடுபட்டிருப்பவர் முதலாவது பிரிவினரேயாவர். இவர்களது போராட்டம் யுத்த அணித்துப் படை திரட்டும் நோக்குடைய கொரில்லாப் போராட்டமா, தன்னெழுச்சிப் போராட்டமா என்பதும் ஆராய வேண்டியதாகும். ஏனெனில் ஒரே தலைமையின் கீழ் இல்லாது, தலைமைப் பீடம் பிரிவுண்டு, குழுக்களாகியுள்ளன. மற்றது வர்க்க நிலை; பாட்டாளி களதோ தொழிலாள, விவசாயிகளதோ தலைமை இவர்களது போராட்டத்தில் கிடையாது. இளைஞர்களும் மாணவர்களுமே போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். பெரும்பாலும் அரைப்

www.tamilarangam.net

பாட்டாளிகளும் குட்டி பூர்ஷ்வாக்களுமே இவர்களாவர்.

இலங்கையும் இந்தியா போன்ற அபிவிருத்தி குன்றிய நாடே. மூன்றாவது உலக நாட்டைச் சார்ந்தது. விவசாய நாடே. மூலதன திரட்சிக்கு வேண்டிய உபரி விவசாயத்தில் கிடையாது. விவசாயத்தில் சிறிது உபரி திரளினும் சர்வ தேசக் கம்பனிகள் தம் ஆதிக்கத்தில் உள்ள யந்திர உற்பத்திப் பண்டங்களான டிராக்டர், பம்செட், உரம், கிருமி நாசினி களின் விலையை உயர்த்தி அந்த உபரியை அபகரித்துக் கொள்ளுகின்றன.

பிற நாட்டுக் கம்பனிகளின் வாணிப மூலதனமே பெருந் தோட்ட உற்பத்திகளான தேயிலை, ரப்பர், தேங்காய், கொக்கோ ஆகியவற்றையும் ஆள்கின்றன. சர்வதேசக் கம்பனிகள், கூட்டுக் கம்பனிகளே சுதந்திர வர்த்தக வலயம் உட்பட உள்நாட்டு உழைப்பை உறிஞ்சும் பண்டங்கள் மீதும் ஆதிக்கம் செலுத்துகின்றன. உள்நாட்டுத் தரகு முதலாளி களிடம் தேசியத் தன்மையே குன்றி விட்டது. கமிஷன் வியாபாரம், விநியோகம், சொத்துகளை வாங்கி விற்பதில் ஏற்படும் லாபம், ஓட்டல் தொழில், வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகளுக்குச் சேவை வழங்கல் (விபசாரம் உட்பட) ஆகியவற்றிலேயே வாழ்கிறார்கள். உலக வங்கி அடிக்கடி ரூபாவின் மதிப்பைக் குறைப்பதில் மகிழ்ச்சியும் லாபமும் அடைந்து வாழ்கின்றனர்.

இக் கேவல நிலையில் தேசிய எழுச்சி அவசியமே. ஆனால் இங்குத் திசை திருப்பப்பட்டுப் பிளவுபட்டிருப்பது மிகவும் வருந்தத்தக்கதே.

இலங்கை உட்பட மூன்றாவது உலக நாடுகளின் விடிவுக்குப் புரட்சி தவிர வேறு வழியே இல்லை. தரகு முதலாளிகள் தேசிய முதலாளிகளாக வாய்ப்பே கிடையாது. ஏனெனில், கூட்டுச் சேர்ந்தபோதும் உபரி திரட்டக் கூடிய யந்திர உற்பத்தி ஏகாதிபத்திய, முதலாளித்துவ நாட்டுக் கம்பனிகள், சர்வதேசக் கம்பனிகளின் ஆதிக்கத் திலேயே உள்ளன. தரகு முதலாளிகள் தாம் பெறும் கமிஷன், லாபப் பங்காகக் கிடைக்கும் சிறு பகுதி உபரியைத் திரட்டி, வெளிநாட்டுக் கம்பனிகளை விரட்டி விட்டு, அதே யந்திர உற்பத்தியைத் தாமே தொடரும் தேசிய முதலாளிகளாக வளர முடியாதவராக உள்ளனர். வெளிநாட்டுக் கடனின் வட்டியும் இவர்கள் திரட்டும் உபரியின் ஒரு பங்கை அபகரிக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கிறது. இது தவிர சர்வதேசக் கம்பனிகளின் தொழில் நுட்ப வளர்ச்சியைத் தேசிய முதலாளிகளால் எட்டிப் பிடிக்க முடியாத நிலையும் உள்ளது. இதனால் இவர்கள் தொடர்ந்து தரகு முதலாளிகளாகவே இருப்பர். அதனாலேயே மூன்றும் உலக நாடுகளுக்கு விடிவே கிடையாது. புரட்சி ஒன்றாலேயே தளைகளை அறுக்க முடியும்.

**— செ. கணேசலிங்கன் —**

(17ஆம் பக்கத் தொடர்ச்சி)

நாம் இதை என்றுதான் உணர்வோம்"

நிச்சயம் இந்த நிலைமைகள் மாறும் முருகேசன். மனித உணர்வுகளை மதித்து வாழும் சமுதாயமாக எங்கள் சமுதாயம் நிச்சயம் மாறும். அதற்கான மாற்றங்கள் ஏற்படத் தொடங்கிவிட்டன.

அவர் தன் சிந்தனையை நிறுத்தி சந்திராவைப் பார்த்தார். அவள் கடிதத்தை வாசித்துக் கொண்டிருந்தாள். வார்த்தைகள் விளங்காவிட்டால் என்ன? இவர் எண்ணங்களும் ஒன்றாகியிருக்கின்றது. வேறு என்ன வேண்டும்.

இந்தச் சமுதாயத்தால் இன்று ஒதுக்கப்படுபவர்கள், இளம்பராயப் பெண்கள்... நரைகளைத் தலையில் தாங்கி திரைகளால் உணர்வுகளை மூடி கனவிற்குள் அடிமைகளாய் வாழும் பெண்கள்... ... மாறிவரும் அந்தச் சமுதாயத்தில் எங்கும் நிறைந்து, நிமிர்ந்து வாழ்வார்கள்... அதும் .. எங்கெங்கு காணினும் சக்தியடா "......

www.tamilarangam.net

# எங்கெங்கு காணினும்...

குறு சிறுகதை

— கண்ணன் —

"ம்... இது என்ன"

கண்ணாடியின் முன் நின்று தன்னை அலங்கரித்துக் கொண்டிருந்த சுகந்தி திடுக்கிட்டாள். உச்சியின் மிக அருகாக ஒரு நரை மயிர் சிரித்துக் கொண்டிருந்தது. நேற்றும் இரண்டு நரை மயிர்களைப் பிடுங்கி எறிந்தது அவளிற்கு ஞாபகம் வந்தது. இருக்கும் கவலையுடன் இன்னும் கொஞ்சம் சேர,

"எனக்கும் முப்பத்தைந்து வயதாகின்றதே"

நினைவின் முடிவுடன் இதழ்க் கடையில் வெளிறிய சிரிப்பொன்று வெளிப்பட தன்னையே கண்ணாடியில் வடிவாக ஆராய்ந்து பார்த்தாள். பயிற்றப்பட்ட பட்டதாரி ஆசிரியையான அவள் முகம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

காலத்தின் தேய்வினால் படிப்படியாக முதிர்ச்சியடைந்து வருவதையும் பழைய கிராமத்தார்களெல்லாம் மறைந்து கண்களில் ஒரு நிரந்தர அமைதி படிந்து வருவதையும் அவன் கவனிக்கத் தான் செய்தான். அதனாலும் இவையெல்லாம் இல்லை என்று மறந்து விட நினைத் தாலும் ஏற்பட்டு வரும் மாற்றங்களை எப்படி மறுக்க முடியும்.

நினைவை உதறிக்கொண்ட வன் மிகுதி அலங்காரத்தை முடித்துக் கொண்டு அக்காளை நெருங்கிக் குரல் கொடுத்தான்.

"அம்மா... சாப்பாடு ரெடியா"

"வந்து சாப்பிடு பிள்ளை"

என்றபடியே வெளியில் வந்த அவள் மகனை ஏறிட்டுப் பார்த்தாள். பெருமூச்சொன்று வெளியேற கண்கள் கலங்குவதை மறைக்க மறுபக் கமாகத் திரும்பினாள்.

x x

வீதியில் இறங்கிச் செல்லும் பொழுது திரும்பிப் பார்த்த சேந்தன் வலப் பக்கம் இறங்கி நடக்கத் தொடங்கி னான். காலை இளம் வெயிலின் ஒளியில் கரையோர மரங்களெல்லாம் பொன் னிறம் பெற்று இலங்கும் அழகில் மனம் பறி கொடுத்தபடி நடந்து

www.tamilarangam.net

கொண்டிருந்தாள்,

"வசந்தா.... சாந்தி ரீச்சர் வாறா.. ..... ஓடி வாம்மா"

என்ற குரல் கேட்டுத் திரும்பிப் பார்த்தாள். சுமதி இடுப்பில் ஒரு குழந்தையுடன் நின்று கொண்டு மற்றக் குழந்தையை பாடசாலைக்கு அனுப்பும் முயற்சியில் இருந்தாள்.

"சுமதி அக்கா எப்படிச் சுகமோ?"

ஒவ்வொரு நாளும் இதே கேள்வியுடன் வசந்தாவை சாந்தியுடன் பாடசாலைக்கு அனுப்பும் இந்த சுமதிக்கு, என்ன... ஆகக்கூடியது 28 வயது வருமா? இந்த வயதிற்குள் இரண்டு பிள்ளைகள், கணவன் ....குடும்பம்.

அவளது கேள்விக்குப் பதிலாகத் தலையாட்டிவிட்டு வசந்தாவின் பிஞ்சுக்கரங்களைப் பிடித்தவாறு தன் சிந்தனையில் ஆழ்ந்த வண்ணம் நடந்து கொண்டிருந்தாள். எனக்கும் கலியாணம் முடிந்திருந்தால் இப்படியொரு பிள்ளை... நினைக்கும் போதே முகுந்தனின் சிரிப்புத் தவழும் முகம் நினைவில் பளிச்சிட்டது.

முகுந்தன்.... ஓ... அவை எவ் வளவு இனிமையான நாட்கள். ஆசிரியப் பயிற்சிக் கலாசாலையில் படித்துக் கொண்டிருந்த அந்த நாட்கள்... சந்தோசமும்... அழகானதும்... அன்பானதும் ஒருவரை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இவர் பார்த்து, வியந்து விரும்பி... இ..
..அந்தன் இனிமையும் தொடர்ந்து வந்த
துயரங்களும்... அவள் இதயத்தில்
மாறாத வடுவாகப் படிந்து, பொய்
இன்று அந்த வடுக்கள் ஆகிவிட்டன.

"காலை வணக்கம் சாந்தி"

குரல் கேட்டு விழித்தவள் பாட
சாலை ஆரம்பித்து விட்டதை உணர்ந்
தாள். அவள் நெருங்கிய தோழியும் சக
ஆசிரியையுமான சந்தியா நின்று
கொண்டிருந்தாள்.

"வணக்கம் சந்தியா"

சொன்னவள் திரும்பி

மகாவிடம்,

"நீ இடைப்பேய் Class இல்
இரம்மா, அன்பு பிறகு வாறன்"
என்றாள்.

"முகுந்தன் அண்ணையின் கடிதம்
இன்று வந்திருக்குது"

சந்தியா அவளது முகத்
தைப் பார்த்துக் கூறியதும், என்ன
என்பது போல விழிகளை உயர்த்தி
அவளைப் பார்த்தாள் சாந்தி.

"முகுந்தன் அண்ணா letter போட்
டிருக்கிறார்.. பாவம் அவர்"

என்னவென்று கேட்க அவளா
யிருந்தாலும் சொல்லுவாள் தானே என்ற
நினைப்பில் பேசாமல் இருந்தாள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முகுந்தன்... அந்த வண்ணங்கள்... அதை பார்த்திருந்த நான் நம்பிக்கைகள்... எல்லாக் கனவாய்ப் போனது பின் என்ன நடந்தால் என்ன... விட்டால் என்ன என்ற நினைத்த வண்ணத்துடன் சாந்தியாவைப் பார்த்தாள்.

" நாங்கள் முகுந்தன் அண்ணனைக் கலியாணம் செய்யச் சொல்லிக் கட்டாயம் போட்டனாங்கள். அவர் நினைத்த விருப் பமில் என்றும் நீங்கள் ஒரு விருப்பமில்லை அதாவது கல்யாணம் பெண்ணைப் பார்த் துச் சொல்லும் படியும் எழுதியிருக் கிறார் "

சொல்லிவிட்டு ஒயே சாந்தியைப் பார்த்தாள். அவள் எதுவும் சொல்லாது தன் நினைவில் மூழ்கிப் போயிருந்தாள்.

முகுந்தனுடனை அந்த இனிய நாட்களை அவளால் என்றும் மறக்க முடியாது தான். எல்லாப் பொருத்தங் களையும் மீறி ஒரே ஒரு பொருத்தத் தைத் தான் சாந்தியின் பெற்றோரால் காட்ட முடியவில்லை. குறைந்த சாதிக் காரன் என்ற நிலைமையச் சாந்தியின் தகப்பனால் பொறுக்க முடியவில்லை. தான் படம் எடுத்தபடி தன் மகளின் மன மகிழ்ச்சியைச் சிதைத்தபடி தன் சாதிப் பெருமையைப் பறைசாற்றி ஓய்ந்தார்.

இதை அடுத்து வந்தன பேச்சுக்கள், பிரயாணங்கள். பெரும் உத்தியோகத்தில் இருந்து சிறு உத்தி யோகத்தர் வரை, நாங்கள் கௌரவம் என்று எதையோ நினைத்து அதைக் கட் டிக் காக்கும்படி எல்லாம் செய்து விட வேண்டுமென்று எல்லா வகை முயற்சி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

களும் கடைசியில் தோல்வியடைந்து போனது. பொருளாதார வசதியில்லாத அவரால் வரட்டுக் கௌரவத்தை நிலைநாட்ட முடிந்ததேயன்றி தன் மனதுக்கு ஒரு மகிழ்வான வாழ்க்கையை மட்டும் அமைக்க முடியவில்லை. என்ன இருந்து என்ன.... ... ஒரு பெண்ணிற்கு தான் நினைத்த வாழ்க்கை கிடைக்கவில்லை என்றால்... வேறென்ன வேண்டியிருக்கின்றது.

எங்கள் சமுதாயத்தின் கோரப்பிடியில் சிக்கி இன்றும்.. எத்தனை ... சாந்திகள்... எத்தனை காலம் மாறினாலும் விடிவு பெறாமல் வாடி ஏங்கிக் கொண்டிருக்கும் மனிதத்தை என்னவென்று சொல்வது....

மனிதரில் வேற்றுமை கண்டு உணர்வுகளைக் கொன்று வரட்டுத்தனங்களை வாழ்க்கையைக் கொண்டிருப்பதில் என்ன மகிழ்வு இருக்கின்றது?... அவரின் இந்தக் கேள்விக்கு இன்றுந்தான் விடையைத் தேடிக் கொண்டிருக்கிறேன்.

இன்று எமது நாட்டில் பெருகிவரும் தனிமனித அவலங்களிற்கு, அது ஆணாயிருந்தாலும் பெண்ணாயிருந்தாலும் சரி, அதற்கு நாங்கள் கொண்டிருக்கும் சில கொள்கைகள் தான் காரணம் என்பதென் எண்ணம். இனம், சாதிப்பிரிவுகள், தனிமனித வாழ்க்கைத் தீர்ப்புகள், சீர் கெட்ட அரசியல் நடைமுறைகள், ஒருவரையொருவர் குழிபறித்து வீழ்த்திட நினைக்கும் அற்பத்தனங்கள்.... என்று தான் மாறப் போகின்றதோ..?

(தொடர்ச்சி 11ஆம் பக்கம்)

www.tamilarangam.net


# இது அவர்கள் மு

கெட்டி மேளம் கொட்ட
மெட்டி தாலி தந்த
கட்டிளம் உள்ளமிரண்டின்
முதலிரவுதுவே
வட்டி வார்த்தது போல்
வரை கடந்த உணர்ச்சிகள்
கரை உடைக்க
காத்திருக்கும் நினைவலைகள்
அங்கே......
கூறை அவிழவில்லை
கூந்தல் கலையவில்லை
குங்குமம் அழியவில்லை
ஒளிவிழியாள் பார்த்திருந்தாள்
பாரில் என்ன இன்பம்
பெறப்போகும் சொர்க்கமென்று
பார்த்து காளையவனும்
பக்கம் வந்தமர்ந்தான்
அவள் இதழில் தான் பதிந்து
அவன் கொடுத்தான் ஒரு முத்தம்
அப்போது....
வாசல் கதவினிலே
வந்தது ஒரு சத்தம்
அதன்
அர்த்தம் தெரிந்திட,
இதயம் நின்று துடித்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# துலிரவு

குபு குபு வென புகுந்தது
ஆழி வெள்ளம்
கரை அவிழ்ந்தது
கூந்தல் கலைந்தது
குங்குமம் அழிந்தது
இருவிழி மருண்டது
அவர்கள்
உணர்ச்சிகள் உறைந்திட
அவனுடல் உயர்ந்தது.
குறையின்றி தீர்ந்தன
கூறிய சின்னங்கள்
குளமாகப் பாய்ந்தது
குருதி வெள்ளம்
குடும்பமும் சுற்றமும்
கூடியே மடிந்தது
ஆம்..... — அவள்
கசங்கிய உடல்
அவன் காலடியில்.

நில்லி கண்ணன்

www.tamilarangam.net

# வளமான எதிர்காலத்திற்கு

## — காந்தீயன் —

(தொடர்)

இவ்வாறு செயற்பாட்டுத் திறனை அதிகரிக்கும் போது நாம் சில முக்கியமான விடயங்களைக் கருத்திற் கொள்ள வேண்டும். அதாவது ஒரு செயற்பாட்டில் இறங்கி செயற்படுத்தும் அதேவேளையில் அதைப் பரிசோதித்துப் பார்த்துக் கொண்டிருக்கவும் வேண்டும்.

எப்படியென்றால் நான் செய்யும் செயற்பாடு திட்டமிட்டபடி செல்கிறதா? இது என்னையோ அன்றி ஏனையோரையோ பாதிக்கின்றதா? இந்த செயற்பாட்டின் போது ஏற்படும் தவறுகளை யாருடன் சேர்ந்து ஆராய்ந்து சரி செய்து கொள்ள வேண்டும்? எப்படிப் பட்டதாக இருக்கும்? முடிவு எதிர்பார்த்ததா? அதாவது சாதகமானதா? அன்றி பாதகமானதா? போன்றவற்றை நாமே ஆழ்நிலைச் சோதனை பரிசீலித்துக் கொண்டால் சாலச் சிறந்தது பயனுள்ளதும்.

அடுத்து கட்டுப்பாடு என்ற மிக முக்கியமான ஒரு விடயத்தை நாம் நினைக்க வேண்டும். கட்டுப்பாட்டை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மூன்றாவது மிருகங்கள் அடையும். அதன் கட்டுப்
பாட்டில் இருப்பது அல்லது கட்டுப்பாட்டு
க்குள் கொண்டு வருவது என்பது மிருகங்க
கடினம் என்பதால், கட்டுப்பாடு என்ற
காரணியைச் சரியாகப் புரிந்தால் நிர்வ
தைச் செய்யலாம் என்ற உறுதி நீ
விரும்பா விடினும் தானே வரும்.

கட்டுப்பாடு என்பது எல்லை
வரம்பு என்ற புதுவாழ்வின் அரவணைக்கு
ஒரு காரணி. இவர் இயங்குகின்ற
அடிமையாகின்றான் என்றால் அவன் மனக்
கட்டுப்பாட்டுடன் பெற்றோர் உண்டாகிய,
சமுதாயம் உண்டாகிய கட்டுப்பாடுகளையும்
சேர்ந்து இழக்கின்றான் என்பது பொருள்.
கட்டுப்பாடுள்ளவர் இருவர் விரைவில் நாசம்
அடையமாட்டார். ஏனென்றால் கட்டுப்பாடு என்ற
நோட்டத்தில் எண்ணற்ற அனுபவங்
களைப் புரிந்திருப்பார் என்பதில் ஐயம்
வரவு கிடைக்கத் தேவையில்லை. இப்படிப்
பார்த்தால் எப்படி எல்லையைப் போடுவது
என்ற வினா எழுகிறது? இந்த வினாவி
ற்கு விடை காண வேண்டுமேயானால், முத
லில் நம்மை நாமே பரிசீலித்துக் கொண்
டால் பின் விடை காண முயற்சிக்கலாம்.
எப்படிப் பரிசீலிக்கலாம் என்று சற்றுச்
சிந்திப்போமா? மிருகங்கள் அடையினும்
இலகுவில் இரவு புரிந்து கொள்ளக்
கூடியதுமான ஒர் வழியை எடுப்போம்.
அதாவது ஒர் இடத்தில் பலபேருடன்
நீ இருக்கிறாய் என்று வைத்துக் கொள்
வோம். அதை ஒரு 15 நிமிடம் மட்டும்
வாய் பேசாமல் மற்றவர்கள் கதைப்பதை
யும் செய்வதையும் அவதானி. பின்பு
2 நிமிடம் அதைப்பற்றிச் சிந்தித்து
இந்தப் பத்து நிமிடத்தில் அவர்கள்


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அனைத்தவற்றில் எவ்வாறு உண்மையானது எவ்வாறு உறுதியானது என்றும் செய்திவற்றில் எவ்வாறு பகுதியானது என்றும் சிந்தித்தால் நிச்சயம் நீ அடையக்கூடாத ஓர் தீர்ப்புக்கு வரப்போது இன்னொருவர் தீர்ப்பாய். பார்த்த நீ அதே உன்னைப் போலவன் இதே செயற்பாட்டிற்கு அவர்களது ஈடுபட்டு இருந்திருக்கும் செய்தால் இலகுவான புரிந்துணர்வாமா? இது மக்களை உன்னை நீ பக்குவப்படுத்த எங்களுடம் பாவ பாடத்தின் முதல் பக்கம். இந்த 15 நிமிடத்தில் நீ சாதித்தது ஒரு வாசக் கட்டுப்பாடு என்பதை மறவாதே.

அந்தக் கட்டுப்பாடு எந்த ஒரு மனிதனையும் உயர்ந்த நிலைக்குக் கொண்டு செல்லும் என்பது அனுபவ சாலிகளின் கருத்து. தினமும் இரவு உறங்கப் போகும் போது, உறங்குவதற்கு முன் அன்றைய காலை முதல் அக்கணம் வரை செய்த நன்மை, தீமைகளை நினைத்து, அந்தத் தீமைகளை இன்னொரு தடவை செய்வதில்லை என்று திடசங்கற்பம் பூணுவது உடன் கட்டுப்பாட்டுப் பழக்கத்தினை வளர்த்திடுவதற்கு வழி காட்டுகின்றது.

எனவே, நாம் கட்டுப்பாட்டைக் கடைப்பிடிக்க எத்தனையோ வழிகள் உண்டு. அவையாவும் எமக்குப் புலப்படுத்துகின்றது என்றால் கட்டுப்பாடு என்ற ஒன்று உண்டென்பதே. உன்னைப் புரிந்து கொள்வதற்கான் உதவாக்க முடியும்.

— நாடகம் —

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# விழுதுகள்

— தொடர்கதை

இராஜேந்திரயன் —

"போடீ"

செல்வராணியம்மாவின் கதவைத் திறந்து உள்ளே கால் பதிக்கையில் கிருஸ்டியானா.

காலை வணக்கம் சொல்லி மிக வாய் நகைத்துக் கொண்டாள். அவளது சிரிப்பு அழகாய் இருந்தது. இவர்களின் நிறம் இவர்களிற்கு ஒரு வரப்பிரசாதம் தான்.

இருபது வயதுப் பெண். என் வாழ்க்கை என் கையில்.... என்று தன் வாழ்க்கையை தானே தாங்கிக் கொண்டிருக்கிறாள். இவர்களின் எல்லா வட்டங்களும் பொருளாதாரத்தைச் சார்ந்திருந்தான் என்று இவளிற்குத் தெரிந்திருந்தது. உழைப்பது வாழ்வை மகிழ்ச்சியாக்கவே இருக்கவே என்று எண்ணுபவர்கள்.

" என்ன ஏதாவது பிரச்சினையா? நான் ஒரு மாதிரியாக இருக்கிறேன் "



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அவன் ஒன்றுமில்லை என்பது போல் தலை யாட்டிவிட்டு தன் வேலையில் ஈடுபடத் தொடங்கினான்.

ஆனந்தி சிரிக்கும் போதும் அவளைப் போலத்தான் அழகாக இருக்கும். அவள் சிரிக்கும் அழகையே எத்தனை முறை ரசித்திருக்கின்றான்.

"என்ன இப்படிப் பார்க்கிறீர்"

"இவ்வளவு சந்தோஷத்தையும் அழகை யும் எங்கே பெற்றாய்"

"எல்லாம் உங்கள் கிட்ட இருந்து சந்தோஷம் தான்"

மனம் விரிந்து சிரிப்பவர்கள் மிகவும் அபூர்வம் தான். காதல் கொண்ட உள்ளங்களிற்கு இந்த நிலை கிட்டு வது மிகவும் உண்மை.

அவளிடம் இருந்து தான் மனம் விரிந்து புன்னகைக்கக் கற்றுக் கொண்டான். அவள் அண்மை இனிய அவனைக் கிளர்ந்தெழச் செய்தது. அன்பு செலுத்தக் கற்றுக் கொள்ளச் செய்தது. மென்மையாய் இருக்கவும் பிறருக்கு உதவி செய்யவும் தூண்டுதலாய் இரு ந்தது. அவளை நேசித்து அவளால் நேசிக்கப் படத் தொடங்கிய காலத் தில் அவன் உண்மையிலேயே மகிழ் வாய் இருந்தான். சந்தோஷத்துடன் அன்பாய் இருந்தான். உதவி செய் தான்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

காதல் எவ்வளவு வலிமையானது என்பதை உணரத் தொடங்கினான். தேசியமும் தேசியப் பிரவாகமும் எவ்வளவு சிக்கலான விடயங்கள் என்று புரிந்து கொண்டான். சுற்றியுள்ள வர்க்கம், அதற்கு வர்க்கம் என்று படம் விரிந்து கொண்டது.

இந்த காதல் அதற்கு உடையவரின் உரிமையாக்கிக் கொள்ளவேண்டுமென்ற வேகத்துடன் வெளிநாட்டிற்குக் கிளம்ப வைத்தது. வாழ்க்கையுடன் போராட காலங்களைக் கடத்தி நின்றான். போராட்டம் என்பது இனிமையான விடயமோ அல்லது இலகுவான விடயமோ அல்ல என்பதை விரைவிலே புரிந்து கொண்டான்.

மனதின் வேகத்தில் வாழ்க்கையில் வெற்றி கொள்ள முடியவில்லை. வாழ்க்கை துன்பங்கள் துயரங்கள் நிறைந்ததாக இருந்தது.

எந்த நிலையிலும் நிதானம் இழக்காத சீரான வேகம் தான் முன்னேற்றங்களைக் கொண்டு வரக் கூடியது. இவன் நிதானம் இழந்தான், அடிபட்டான், தடுக்கி விழுந்தான், எழுந்தான்; அனுபவம் அவனை முன்னேற்றிக் கொண்டு வந்தது.

“சண்டிரன் ஜெலிபோரன்”

யாரோ தந்திரங்கள். இவர்களிடை சந்திரனின் ஒரு காதலும் அரியதான வரலாறு.

“அலை”


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"அலோ நான் மோர்"

"என்னடாப்பா டக்கென்று போய்? சரியான சுகம். ரீவி பார்த்துக் கொண்டி ருக்கின்றேன்"

"ஒன்றுமில்லை பின்னேரம் Room இற்கு வாறன்"

"மூன்று மணிக்கு செல்வராசண்ணன் வீட்டிற்கு வாருமென்"

"அப்ப சரி"

இடையில் விட்டு விட்டு வந்த கிளையன்ற (client) கவனிக்க ஓடினேன்.

அவரைத் தேடி வரும் நண்பர்களில் ஒருவன். வந்தால் தன் கஷ்டங்களை ஒரு பாட்டம் சொல்லி அழுது தீர்ப்பான். இவன் ஒரு சுமைதாங்கி என்பது அவன் எண்ணம் போலும். இது அவனிற்கு ஒரு ஆறுதல் தரும் என்றால் சொல்லி விட்டுப் போகட்டும் என்று இவனும் பேசாமல் இருந்து விடுவான்.

தன் கஷ்டங்களைச் சொல்லி மற்றவர்களையும் கஷ்டப்படுத்து வது எவ்வளவு நியாயமானது என்று இவர் களிற்கு எப்போது தான் புரியப் போகின் றதோ?

வந்தான் மூன்று மணிக்கு. வரும் போதே,

"மச்சான் என்ரை நிலைமையப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பார்த்தியாடா.....?"

அழகையாகச் சொல்லிக் கொண்டு வந்தான். எண்ணியவா நடந்து விட்டது.

"கொஞ்சம் பொறு, சொல்லிப் போட்டு வாறன். Room இலே போய்க் கதைப் போம்"

Room இற்குப் போகும் வரை பொறுக்காமலேயே தொடங்கி விட்டான்.

"என்ர சிநேகிதன் ஒருவன் கடிதம் போட்டிருக்கிறன். என்ர lover இற்கு ரெஜிஸ்ரேசன் (Registration) முடிந்ததாம்"

கண்ணன் கலங்கி, அவனைப் பார்க்கவே பரிதாபமாக இருந்தது.

அவன் தன் கதையை முன்னரே சொல்லியிருந்தான். படிக்கும் காலத்தில் ஏற்பட்ட பழக்கம். நட்பாகக் காதலாகியிருந்தது. பிரச்சினை சாதி வேறுபாடு. நடையந்தி, அது தான் அவர் பெயர். நடையந்தி வேறு சாதி, இவனை விட கொஞ்சம் உயர்வாம்.

இடையில் ஒரு முறை வீட்டில் தெரிய வர ஏக அமர்க்களப் பட்டு பின்னர் இரகசியமாகத் தொடர்ந்து இங்கு கடிதங்களாக வந்து போய் இன்று இந்த நிலை.

இது பெரிய அடிதான்.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இந்த இளைஞனை இந்தக் காலத்தின்
கொள்ள முடியாத பெரிய விடயம் தான்.

"நான் தேவியின் திருமணம் நடந்தனம்
தந்தது!"

என்று தொடங்கி சினிமா
HERO தானாக காட்சி மாற்றி வேஷம்
போட்டு love என்றால் என்னவென்று
தெரியாமலே love பண்ணத் தொடங்கி,
"நீ அங்கே உன் நினைவுகள் இங்கே
என்று தொடர்ந்து ... இன்று,
"போடா... பொய்யவ்... பொய்யவ்"
என்று சொல்லக்கூடும் வரை வந்து தொட
க்கி நிற்கின்றது.

இது பெரிய பரிதாபம் தான்.
ஒரு இளைஞனதும் இளம் பெண்ணின
தும் இனிய மெல்லிய உணர்வுகள்
ஒன்று சேர முடியாமலும் பிரிந்து கொள்ள
முடியாமலும் தடையாய் நிற்கும் இந்த
சமூக அமைப்பு... வெட்டி வேர்க்க
ந்து ஒரு கொட்டமாய்ச் சிரிக்கும் இந்த
சாதிமுறை.

மனிதனை மனிதன் நேசிக்க
முடியாத, நேசிக்கத் தெரியாத தன்மை
தலைமுறை தலைமுறையாகத் தொடர்ந்து
வரும் பரிதாபம்.

எத்தனை இளம் உயிர்க
ளின் உயிரைப் பலியெடுத்து எத்தனை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மனிதர்களே மனிதனைக் மனைவிகளே
இரணைப்பதற்கும் இந்த அமைப்
பொரு ளைகொஞ்சிக் வாழுதல் சாவ்வாய்
வெட்கக் கேடான விடயம்.

"காதலன் தற்கொலை, காதலி நஞ்சு குடித்து மரணம்!"

"காதலிற்கு சாதியை விதித்த காரணத்தால் கடலில் குதித்து இளம் சோடி மரணம்"

Paper இல் செய்தி வாசிக்கும் பொழுதெல்லாம் ஒரு வலி சிலீரென்று இதயத்தைப் பிசையும்.

நெஞ்சுக்குத் தெரியாத; நெஞ்சுக்குச் சொல்லிக் கொடுக்கப்படாத ஒரு இனத்தின் வெறுப்பாடோ இது..?

எப்படிச் சொல்லமுடியும். ஆம் கொன்றும் இவ் கொன்றுபாலச் சில கோஷ்கள் கேட்கின்றனவே..? மனி தனை மனிதன் நேசிக்க, மனித நேசத் தைப் புரிய வைக்க, புரிந்து கொள் ளவேண்டிய குரல் கேட்டுக் கொண்டு தான் இருக்கின்றது.

நிச்சயம் ஒரு நாள் இந்த நிலைமை மாறும். மனிதர்கள் அன்பு பட்டு வளையர்கள், கூடி நிறை ந்திவார்கள்.

புத்தரின் அன்பு மார்க்கத் தையும் யேசுவின் உன்னத போத


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அவளவின் நேர்மையையும் சாந்தியை யும் இணைத்துக் கொண்டவர் தான் மக்களே.

சியபுரமும் இயற்கை மணம் நீந்தக் கொண்டிருக்கிறது. இது ஒரு நாள் பகிரென்று விடியத்தான் போகி றது. அன்று எல்லோரும் கைகோர்த் து புன்னகைத்து நடக்கத்தான் போகின்றனர்.

"நண்பா....! அதுவரை நீ அது பற்றி செய்வது... இவை விரைவு பண்ணுவேயும்... நான் நண்பனின் கால் நிறைத்துடைத்துக் கொள்!

"மன்னர் வரும் போது நீதியும் பண்ணித் தந்தானடா. உன்னைத் தவிர வேறொருவன் நேர்த்தையும் பார்க்க மாட் டேன்னென்று"

இந்நாளை உன் நேசமும் எவ்வளவு சியபுரமையாய் நினைத்திருந்தேன். காதல் என் றேன். என்னை வென்று, என்னைக் கொண்டு போனா..? விடுதை கொடுத்தால் அல்லவா நிற்பேனா..? அவனிடம் என்னை இருக்கட்டும். என்று கிடைக்க மொழியில் ஒரு நல்லவன் உள்ளதென்று தெரியவில்லையா?

அவள் எண்ணமும் சொல்வது போல் இருந்தால் நிதானமாகக் கொண்டிருந்து. அதுவரை உள்ளே வந்து இருந்த நாய் விசிலடிக்கிறது. அதில்....?

(தொடரும்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# புதுக் கவிதை -
# தோற்றம், வளர்ச்சி, தேக்கம்

— டாக்டர். தி. மறைமலை —

மனிதனது சிந்தனையாற்றலைத் தூண்டி விடவும், தன்னைப் பற்றிய உள்முகச் சிந்தனையில் அவனை ஈடுபடுத்தவும் உதவும் ஆற்றல் மிக்க கலை வடிவம் கவிதையேயாகும். வாய்மொழி இலக்கியம் தோற்றம் பெற்ற காலத்திலும், வரிவடிவம் உருவாக்கப்பட்ட பின்னர் ஏட்டிலக்கியம் எழுச்சி பெற்ற காலத்திலும், மனிதனை ஆற்றுப்படுத்தவும், அவனது உள்ளத்திற்கு அமைதி பயக்கவும் கவிதையே துணையாக விளங்கியிருக்கிறது. ஆனால் கவிதை இன்னது என்னும் தெளிவும், கவிதையைப் பற்றிய கோட்பாடும் அவ்வக் காலப் போக்கிற்கு ஏற்பவே அமைந்தன. வரிவடிவம் நிலைபெற்று தனிமனிதக் கற்பனையாகக் கவிதை கருதப்பட்ட காலத்திலேயே கவிதை பற்றிய கோட்பாடுகளை வரையறுக்க வேண்டும் என்ற எண்ணமும் தோன்றிவிட்டது. நம் மொழியைப் பொறுத்த வரையில் தொல்காப்பியர் முதல் இன்று வரை கவிதையைப் பற்றிய பல்வேறு கோட்பாடுகள் உருவாகியுள்ளன. காலப் போக்கில் ஏற்பட்ட மாறுதல்களும், புதிய இலச்கிய வகைகளின் தோற்றமும் தொன்மையான இலக்கண நூல்களின் போதாமையை உணர்த்தி நிற்கின்றன.

இத்தகைய நிலையில், இலக்கியங்களை ஆய்ப்புகுவோர், காலப் போக்கிற் கேற்பவும், சமுதாயச் சூழலுக்கேற்பவும் தமது ஆய்வு அளவைகளை மாற்றியே ஆகவேண்டும். அங்ஙனம் மாற்றிக் கொள்ளாமல் பழைய அளவுகோல்களைக் கொண்டு புதிய வளர்ச்சிகளை அளக்க முற்பட்டதனால் ஏற்பட்ட குழப்பமே, புதுக்கவிதை உரிய முறையில் வரவேற்கப்படுவதற்கும், ஆயப்படுவதற்கும் தடைக்கல்லாக விளங்கியது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## புதுக் கவிதை என்றால் என்ன?

இவ்வினாவுக்கு விடையளித்தல் மிகமிகக் கடினமே யாகும். கவிதை என்றால் என்ன? இலக்கியம் என்றால் என்ன? என்னும் வினாக்களுக்கே இன்னும் விடை கண்டாகவில்லை. இனியேனும் விடை காண்போம் என்னும் நம்பிக்கையும் இல்லை. ஆனால் இவற்றிற்கு விடை காண்பதைவிட இவை விளங்கிக் கொள்ளப்படுதலே இன்றியமையாதது. கவிதை என்றால் என்ன என்பதை உணர்த்துவதைக் காட்டிலும் ஒரு கவிதையை உணர்ந்து சுவைப்பது எளிமையான பணியாக விளங்குகிறது. இதனால் தான் 'கவிதை' என்பதை வெறும் வரிவடிவத் தொகுதியாக அமைந்த எண்ண வார்ப்புகளாகக் கருதாமல் மனித மனம் பெறுகின்ற அநுபவமாகக் கருதுகிறார்கள். ஒரு கவிதையைப் படிப்பதனால் ஏற்படும் இன்பம் ஒரு குழந்தையின் புன்சிரிப்பைக் காண்பதனாலும் ஏற்படலாம். இளைஞர்களுக்கு அவர்களது காதலிகளே கவிதையாகவும், தாய்மார்களுக்குத் தமது குழந்தைகளே கவிதையாகவும் காட்சி தருவதில்லையா! இதனால்தான் கவிதையை "சுயத்தின் கசிவு" (The Sweating self) என்றார் ஒருவர். ஃபிளேபர் என்னும் கவிஞர் தன்னையே "மனித வடிவத்தில் அமைந்த ஒரு பேனாவாகக்" குறிப்பிட்டார். (I am a Pen in human form) உணர்வின் நெகிழ்வால் விளங்கிக் கொள்ள வேண்டிய கவிதையை வரிவடிவப் பாகுபாட்டால் வரையறை செய்வது அறிவுடைமை ஆகுமா? உரைநடை, கவிதை என்ற இரண்டுமே தமது புற உறுப்புகளாகச் சொற்களைக் கொண்டமைகின்றன. ஒரு சொற்கூட்டம் "கவிதையா?" உரைநடையா? என்பதனை மனத்தின் அனுபவமே தெரியக் காட்டவல்லது.

உணர்வின் உந்துதல்களின்றிச் செய்திகளை வழங்குவதற்குக் கவிதை வடிவத்தைப் பயன்படுத்திய யாப்புப் பயிற்சியாளரும், சமகால வாழ்வைத் திறனாயும் முகத்தானும் தமது பட்டறிவைப் பிறரொடு பகிர்ந்து கொள்ளும் வகையிலும் உணர்வுத் தெறிப்புகளை உரைநடையில் வழங்கிய எழுத்துக் கலைஞர்களும் இருபதாம் நூற்றாண்டில் பல்கிப் பெருகினர். இதன் விளைவாகக் கவிதைத் தன்மை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மிக்க உரைநடையும், உரைநடைத் தன்மை மிக்க கவிதையும் தோன்றின. கவிதை, உரைநடை இரண்டிற்கும் வேறுபாடு காண்பது மேலும் கடினமாகி விட்டது. இந்தகைய காலச் சூழலிலேயே புதுக்கவிதை ஓர் இலக்கிய வகையாக எழுச்சியுற்றது.

உலக இலக்கிய அரங்கில் புதுக் கவிதையின் தோற்றம் தொழிற்புரட்சியையும், அறிவியல் வளர்ச்சியையும் பின்னணியாகக் கொண்டது. 'நவீனத்துவம்' (Modernism) என்னும் சொல் புதுக் கவிதையை ஆய்வோரால் மீண்டும் மீண்டும் பேசப்படுவதைக் காணலாம். "நவீனத்துவம்" அல்லது "புதுமையியல்" என்றால் என்ன? வழி வழி வந்த வற்றைப் புறந்தள்ளி, புதிய சிந்தனைகளுக்கு முதன்மையளிப்பதையும் முன்னோரால் நிறுவப்பட்ட பழகிப் போன நடைமுறைகளை விடுத்து, புதுமையான இக்கால நடைமுறைகளுக்கேற்ப, பழையனவற்றை மாற்றியமைத்தலையும் புதுமையியல் என்கின்றனர். ஆனால் இவ்வளவு சுருக்கமாகப் புதுமையியலை வரையறுத்துவிட முடியாது. புதுமையியலைப் பற்றிய விளக்கங்கள் பல்வகைப்பட்டன. கேப்ரியல் ஜோசிபோவிசி என்பவர் "புதுமையியல் என்பது ஆயிரத்து எண்ணூற்று எண்பதிற்கும், ஆயிரத்துத் தொள்ளாயிரத்து இருபதுக்கும் இடையே நிகழ்ந்த கலையுலகப் புரட்சி" எனவும், "செஸேன் (Cezanne), மல்லார்மே, பிரஸ்ட், ஜாய்ஸ், காஃப்கா, எலியட், சோன்பர்க், ஸ்ட்ராவன்ஸ்கி ஆகியோரோடு தொடர்புடையது புதுமையியல்" எனவும் கூறுகிறார். (Gabriel Jossipovici—"The lessons of Modernism and other essays" Macmillan 1977) புதுமையியலுக்கு இவர் அளிக்கும் சில விளக்கங்கள் ஃபியூச்சரிசத்தோடு (Futurism) புதுமையியலைக் குழப்புவனவாக உள்ளன.

ஃபிலிப்போ தொமாசோ மேரினற்றி (Marinetti, Filippo Tommaso 1876—1944) என்பவரால் தொடங்கப் பெற்ற ஃபியூச்சரிச இயக்கம் பாரீசிலுள்ள இளஞ்சிந்தனையாளர்களைக் கவர்ந்தது. இவரது ஃபியூச்சரிசம் பற்றிய அறிவிக்கை (Manifesto) 1906—இல் வெளி வந்தது. பழைய மரபு வழிப் பெறுமதிகளையும் (Traditional values) கருத்துக்களையும் பழமை வாதம் (Pastism) என்று வெறுத்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தொதுக்கிய இவரும் இவரது வழியினரும் வன்முறையை விரும்பினார்கள். வன்முறை சார்ந்த கருத்துகள், கற்பனைகளை விரும்பினர்; கற்பு, அழகு, பரிவுணர்வு இவற்றைக் கடிந்து ஒதுக்கினர்; இயந்திரத்தை வழிபட்டனர்; இக்காலத் தொழிலியலைப் போற்றினர்; பெண்மையைத் தூற்றினர்; கிறித்துவ மத அடிப்படைகளைத் தகர்த்தெறிய முனைந்தனர்; டாடாயிச, சர்ரியலிச வாதிகளைப் பாராட்டினர்; ஃபாசிசத்தைப் போற்றினர். இவர்களது இயக்கத்தின் தாக்கத்தால் புதுக் கவிதையில் கணிதக் குறியீடுகள், அறிவியல் வாய்பாடுகள் அறிமுகப் படுத்தப்பட்டன. அறிவியல், தொழில் நுட்பச் செய்திகள், உவமை, உருவகங்களாகப் புனையப்பட்டன.

சோவியத் எழுத்தாளர்களும் இவ்வகைப் புதுமையியற் போக்கைத் தமக்கேயுரிய வழியில் பின்பற்றினர். இவர்கள் மேரினற்றி குழுவினரைப் போல் வன்முறையையும், போரையும் விரும்பவில்லை; வெறுத்தொதுக்கினர். தொழில் நுட்பத்துக்கும் முதன்மையளிக்கவில்லை. ஆனால் புதியதொரு மொழியை, புதியதொரு பண்பாட்டை உருவாக்க விரும்பினர். பழைய பண்பாட்டு மரபுகளைத் தூக்கி எறியத் துடித்தனர். "புதுமையியல் என்னும் விசைப் படகிலிருந்து புஷ்கின், தோஸ்தியோவ்ஸ்கி, டால்ஸ்டாய் ஆகியோரைத் தூக்கி எறிய வேண்டும்" என முழங்கினர். இதுவரை பயன்படுத்தப் பட்டுவந்த மொழியை வெறுத்து, புதிய குறியீடுகள் கொண்ட புதிய சொற்கோவையையுடைய புது மொழியைப் பின்பற்ற வேண்டுமென அறிவுறுத்தினர். இவர்களது இயக்கம் 1910—இல் தொடங்கப் பெற்றது. கிளெப்னிகோவ் (Khlebnikov) குருச்சோனிக் (Kruchonik) மயகாவ்ஸ்கி (Mayakovsky) பர்லியுக் (Burlyuk) ஆகியோர் இவ்வியக்கத்தின் முன்னோடிகளாவர். இவர்களது அறிவிக்கை (Manifesto) 1912—இல் வெளியிடப் பட்டது. இவர்கள் குறியீட்டியலை எதிர்த்தனர். எவ்வழியிலேனும் அதிர்ச்சியை ஏற்படுத்த வேண்டும். (To shock at any cost) என்பது இவர்களது குறிக்கோளாக இருந்தது. இவ்வியக்கம் சோவியத் பொதுவுடைமைக் கட்சியால் ஏற்கப்பட வில்லை.*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பியூச்சரிசம் பழமை வெறுப்புக்கு முதன்மையளித்து ஓர் எதிர்மறை இயக்கமாக விளங்கியது. ஆனால் புதுமை யியல் ஓர் ஆக்கமுறையிலான இயக்கம் ஆகும். எவ்வகை யிலேனும் அதிர்ச்சி மதிப்பை ஏற்படுத்துவது பியூச்சரிசத் தின் முதன்மையான குறிக்கோளாக இருந்தது. பழமையை விலக்கிப் புதுமையைப் போற்றும் வகையில் பிரமைகளை உடைத்தெறிதல் (Iconoclasticity) புதுமையியலின் செயல் முறையாகத் திகழ்ந்தது.

* ஃபியூச்சரிசத்தின் தாக்கம் தமிழ்ப் புதுக்கவிதையில் ஓரளவு காணப்படுகிறது. "கனவுகள் + கற்பனைகள் = காகிதங்கள்" என்று தமது கவிதை நூலுக்குக் கணித வாய்பாடு போல் தலைப்பளித்த மீராவும், 'ஆதிக்க வெள்ளத்தின் அடியிலே கிடந்தாலும், பாதிக்கப் படாதவனே பாஸ்பரசே கண்விழிப்பாய்', என்று பாஸ் பரசை உவமையாகக் காட்டும் தமிழன்பனும் ஃபியூச்சரி சத்தின் தாக்கத்திற்கு உட்பட்டவர்கள் ஆவர்.

"மரணித்து விடுங்கள் வார்த்தைகளே" எனப் புதிய வினையை ஆக்கும் தமிழன்பனும், அவர் வழியில் மௌனித்தாள். புன்னகைத்தான் என்றெல்லாம் எழுதும் ஏனைய கவிஞர்களும் புதிய வினைச் சொற்களை ஆக்க முயன்ற பியூச்சரிச வாதிகளின் வழியிலே செல்கின் றனர். பியூச்சரிசவாதிகள் மொழியை முற்றாக மாற்றி விட வேண்டுமென்று முனைந்ததைப் போல, இவர்கள் முனையவில்லை. மொழி நடையில் ஒரு மாற்றத்தை ஏற் படுத்தவும், சொல்லும் முறையில் ஒரு புதுமையை ஏற் படுத்தவுமே தமிழன்பன் வழி வந்தோர் முனைந்தனர்.

புதுமையியலாளர்கள் பழமையோடு எவ்வித பாடும் கொள்ள விரும்பவில்லை. சோதனை முயற்சி (Technieal experimentation) திகைப்பூட்டும் அடிக்கருத்துக் கள் (Themi tic surpise) எனும் இரண்டும் புதுமையியலின் இன்றியமையாப் பண்புக் கூறுகளாக விளங்கின. (Decline of the new : Irwing howe) புதுமையியல் இலக்கி யத்தின் பண்புகளாக இர்விங் ஃகோவே மேலும் கூறுவன வற்றை இங்குத் தொகுத்தளிப்பது பொருத்தமாக விருக்கும்.

புதுமையியல் இலக்கியம் (modernist literature) இக்கால இலக்கியம் (Contemporary titerature)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

என்னும் இரண்டும் அடிப்படையிலே வேறுபட்டவை. இக்கால இலக்கியம் எனும் போது காலத்திற்கு மட்டுமே முதன்மையளிக்கப்படுகிறது. புதுமையியல் இலக்கியம் என்னும்போது இலக்கியத்தில் உணர்வுச் சுவையாலும், நடையாலும் வெளிப்பட்டு உத்திகளாலும் புதுமை பெற்று விளங்குவது உணர்த்தப் படுகிறது.

புதுமையியல் இலக்கியம் புரிந்து கொள்ள இயலாக் கடுமையுடன் இருக்கும். பழம்போக்குடையோர்க்குப் புதுமையியல் எழுத்தாளர் வேண்டுமென்றே விளங்கா வண்ணம் எழுதுவதாகத் தோன்றும். புதுமையியல் எழுத்தாளர் இதுவரை பழக்கமில்லாத புதிய வடிவங்களில் இலக்கியம் படைக்க முயல்கின்றார். சுவைஞர்களின் உள்ளத்தை மருட்டும் நுவல்பொருள்களைத் தேர்ந்தெடுத்து, அவர்களால் போற்றி மதிக்கப்படும் உணர்வுகளை அச்சுறுத்தும் வகையிலான இலக்கியங்களே புதுமையியல் எழுத்தாளரால் படைக்கப்படுகின்றன. மரபுநெறி போற்றும் திறனாய்வாளர் புதுமையியல் எழுத்தாளரது படைப்புகளை, நசிவுத்தன்மை வாய்ந்தன (Decadent) என்றும், தனிக்குழுவுக்கு உரியது (Coterie) என்றும் தூற்றுவர்.

புதுமையியல் இலக்கியவாதிகள் முந்தைய இலக்கிய நெறிகளினின்று விலகித் தமக்கென ஒரு தனிப்பாதை அமைத்துக் கொள்ள முயல்கின்றனர். ஆனால் புதுமையியல் என்பது எந்தக் குறிப்பிட்ட தனித்த நடையுடனும் நிறைவு கொள்வதில்லை. மேலும் மேலும் வேறுபட்ட நடை, பலவகைப் பட்ட உத்திகள் என்று புதுமையியலின் பயணம் தொடர்ந்து கொண்டே செல்லும்.

புதுமையியல் எழுத்தாளருக்குத் தமது கால மரபு அயர்வூட்டும் அடிமைத்தளையாகத் தோன்றுகிறது. தம் காலத்து அறநெறியைப் போலித்தன்மை மிக்க ஒன்றாகவே புதுமையியல் எழுத்தாளர் கருதுகின்றனர்.

— தொடரும் —

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

* குள்ளத்தன்மைக்குக் காரணங்கள் பல:

1) மரபு ரீதியாக பெற்றோரிடமிருந்து பாரம்பரிய மாற்றம்
2) குரோமோசோம் குறைபாடுகள் (DOWN'S & TURNER SYNDROME.)
3) நாளமில்லாச் சுரப்பிகளின் (என்டொக்ரைன்) குறைந்த மந்தமான பணித்திறன் (முன் பிட்யூட்டரி, பின் பிட்யூட்டரி, தைராயிட், அண்ணீரகம், சூலகம் ஆகியவற்றின் கோளாறுகள்
4) ஜீரணம் போதாமல் கோளாறுகள்
5) எலும்பு வளர்ச்சிக் குறைபாடுகள்
6) உணவுப் போசாக்குப் பற்றாக்குறை
7) காசநோய், மலேரியா போன்ற நாட்பட்ட நோய்கள்.

குள்ளத் தன்மையின் காரணத்தைக் கண்டறிந்து அந்த காரணத்தினை அகற்ற வேண்டும். வளர்ச்சி ஹோர்மோன் (GROWTH HORMONE) ஊசி மூலம் செலுத்தி வளர்ச்சியை ஊக்குவிக்க. முயற்சிகள் எடுக்கலாம்.

— அறிவியல் வினா விடை —

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உங்கள்
விருப்பங்களை
தாங்கி வரும்
'சிந்து'
உங்கள்
சஞ்சிகை